முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம்: 1038

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

02.08.2022, செவ்வாய்கிழமை

1. தர்மபலம் கொண்ட அரங்கனே
   தவசியாய் வாழும் தேசிகனே
   பெருமைமிக்க ஞான யுகமாற்றம் செய்ய
   பிரணவக்குடில் படைத்த அரங்கனே
2. அரங்கனே உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
   அருளுவேன் ஞான அறிவுரை ஆசி
   (சுபகிருது வருடம் ஆடி மாதம் 17 நாள், 02.08.2022 செவ்வாய்கிழமை)
   வரம் தருகின்றேன் அரங்கன் இன்னும் சக்தி கூட
   வையகம் எங்கும் அரங்கன் புகழை பரப்பி
3. பரப்பியே இந்த பேருலகம்
   பிரணவ சக்திமிகு ஞான யுகமாக
   வருமுலகில் மாற்றம் கொள்ள அருள்புரிகின்றேன்
   வரம்பெற வருகின்ற தொண்டர்படைகளெல்லாம்
4. எல்லோரும் என்னருள் பெற்றவர்கள்
   எங்கும் அரங்கன் நாமஜெபம் சொன்னால் போதும்
   அங்கெல்லாம் ஆறுமுகன் யான் இறங்கி அவர்களுக்கு பாதுகாப்பும்
   ஆக்கமும் தந்து காத்து அருள் புரிவேன்
5. அருளாக அறமாக அரங்கனுக்குள் யான்
   அனைத்துமாக நிரம்பி இருக்கின்றேன்
   வரம்பெற என்பால் விரும்பும் மக்களெல்லாம்
   வணங்கி ஓங்காரக்குடில் நோக்கிச் சென்று
6. சென்றுமே அரங்கன் திருவடி பற்றி
   சித்தி தரும் மகா மந்திர தீட்சை ஏற்று
   நன்று பெற தொடர் ஜெபங்கள் புரிந்து
   ஞானவாழ்வாக தர்மங்கள் செய்து வர
7. வருக அவர்கள் வாழ்விலே வந்தடையும் எல்லா சித்திகளும்
   தருக தர்மத்தின் பலத்தாலே
   தானவர்கட்கு தவசி எனும் நிலையோடு
   தர்மவான்கள் என்கின்ற பாதுகாப்புக் கூடி
8. கூடியே அவர்களெல்லாம் அரங்கன் தேடலின் வழி
   குறையில்லாத ஞானிகளாகி சிறக்க நேரும்
   மாறுதலை அரங்கனுள் இருந்து
   மகான் சுப்ரமணியர் யானே நிகழ்த்துகின்றேன்

ஞான அறிவுரை ஆசி முற்றே —சுபம்—